

Saidai Duraisamy's
Manidhanaeyam Free IAS Academy
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| வினாத்தொகுப்பு எண்: | பதிவு எண்: |
| --- | --- |
| | |

# TNPSC - தொகுதி - IV & VAO தேர்வு - இணைய வழி தொடர் மாதிரி தேர்வு
## இந்த வினாப்புத்தகம்
## பகுதி-அ (பொதுத் தமிழ்) உள்ளடக்கியது

**கால அளவு: ஒரு மணி நேரம் முப்பது நிமிடம்** **மொத்த மதிப்பெண்கள்: 150**

வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்கண்ட அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத்தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத்தொகுப்பு, 100 வினாக்களைக் கொண்டுள்ளது.
3. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் பெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். வினா தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.
4. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும். எல்லா வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
5. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
6. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால். உங்களுக்கு வழங்கப்படும். விடைகளை குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
7. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால் குறித்துக்காட்டவேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்க தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
8. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களைக் (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தேர்வு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். உங்களுக்கு விடை தெரியவில்லை, எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும். எப்படியாயினும், ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடைதான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
9. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையை விட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத் தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
10. குறிப்புகள் எழுதி பார்ப்பதற்கு வினா தொகுப்பின் கடைசி பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்படவேண்டும்.
11. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்ற தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

[Turn over]



Saidai Duraisamy's
**Manidhanaeyam Free IAS Academy**
(Run by Manidha Naeyam Charitable Trust)
28, 1st Main Road, CIT Nagar, Chennai - 35 (HO).
Mail Address: manidhanaeyam@gmail.com
Website: www.mntfreeias.com

| Question Booklet No: |
| --- |
| |

Register Number: | | | | | | | | | | |

## TNPSC - Group - IV & VAO Exam - Online Test Series
## This Booklet Contains
## Part-A (Tamil Eligibility-Cum-Scoring Test)

**Duration: One Hour Thirty Minutes** **Total Marks : 150**

**Read the following instructions carefully before you begin to answer the questions**

## IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This Question Booklet contains 100 questions.
3. Before answering the questions, you .shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes. and get it· replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.
4. Answer all the questions. All the questions carry equal marks.
5. You must write your Register Number in the space provided on the top right side of this page. Do not write anything else on the Question Booklet.
6. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the mem"oranduin of admission (Hall Ticket).
7. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with BLACK INK BALL POINT PEN. If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
8. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one 90rrect answer, shade the one which you consider the best. If you do not know the answer, you have to mandatorily shade (E). In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
9. You should not remove or tear off any sheet from this Question Booklet.You are not allowed to take this Question Booklet and the Answer Sheet out of the Examination Room during the time of examination. After the examination. you must hand over your Answer Sheet to the Invigilator. You are allowed to take the Question Booklet with you only after the Examination is over.
10. You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.
11. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

[Turn over]

பகுதி-அ - பொது தமிழ்

Part-A- General Tamil

6 ஆம் வகுப்பு – தொகுதி - 2

| | | | |
|---|---|---|---|
| வினாக்கள் | : 1 - 100 | மொத்த மதிப்பெண்கள் | : 150 |
| Questions | : 1 - 100 | Total Marks | : 150 |

1. உருவ வழிபாடு செய்யாமல் வெட்ட வெளியையே கடவுளாக வழிபட்டவர் -----
   (A) குதம்பைச் சித்தர்
   (B) பாம்பாட்டிச் சித்தர்
   (C) கடுவெளிச் சித்தர்
   (D) சிவவாக்கியர்

2. “நாடா கொன்றோ காடா கொன்றோ
   அவலா கொன்றோ மிசையா கொன்றோ
   எவ்வழி நல்லவர் ஆடவர்
   அவ்வழி நல்லை வாழிய நிலனே” – இப்பாடலைப் பாடிய புலவர் யார்?
   (A) கபிலர்
   (B) ஔவையார்
   (C) நக்கீரனார்
   (D) இடைக்காடனார்

3. சரியான இணையைக் கண்டறிக
   a. உப்பக்கம் - முதுகுப்பக்கம்
   b. உதுக்காண் - சற்றுத் தொலைவில் பார்
   c. உம்பர் - கீழே
   (A) a, b சரி
   (B) a, c சரி
   (C) அனைத்தும் சரி
   (D) b, c மட்டும்

4. பின்வரும் ஆண்டுகளில் முத்துராமலிங்கர் தேர்தலில் போட்டியிடாத ஆண்டு எதுவெனக் கண்டறிக
   (A) 1937
   (B) 1938
   (C) 1946
   (D) 1957

5. வைதோரைக் கூட வையாதே – இந்த
வைய முழுதும் பொய்த்தாலும் பொய்யாதே!
வெய்ய வினைகள் செய்யாதே – கல்லை
வீணில் பறவைகள் மீதில் எய்யாதே! – என்று படியவர் யார்?
   (A) பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம்
   (B) முடியரசன்
   (C) உடுமலை நாராயண கவி
   (D) கடுவெளிச் சித்தர்

6. பொருத்துக

| | | | |
|---|---|---|---|
| a. டால்ஸ்டாய் | – | 1. | கிரேக்கச் சிந்தனையாளர் |
| b. சேக்ஸ்பியர் | – | 2. | ஆங்கில கவிஞர் |
| c. மில்டன் | – | 3. | ஆங்கில நாடக ஆசிரியர் |
| d. பிளேட்டோ | – | 4. | ரஷ்ய நாட்டு எழுத்தாளர் |

| | | | | |
|---|---|---|---|---|
| (A) | 1 | 2 | 3 | 4 |
| (B) | 3 | 1 | 2 | 4 |
| (C) | 1 | 2 | 4 | 3 |
| (D) | 4 | 3 | 2 | 1 |

7. பின்வரும் நூல்களுள் தாராபாரதி எழுதாத நூல் எதுவெனக் கண்டறிக
   (A) சுட்டு விரல்
   (B) இது எங்கள் கிழக்கு
   (C) புதிய விடியல்கள்
   (D) விரல் நுனி வெளிச்சங்கள்

8. "சாதியையும் நிறத்தையும் பார்த்து மனிதனை மனிதன் தாழ்வுபடுத்துவது பெருங்கொடுமை; ஆண்டவன் மனித குலத்தைத்தான் படைதானே தவிரச் சாதியையும் நிறத்தையும் அல்ல; சாதியையும் நிறமும்
அரசியலுக்குமில்லை, ஆன்மீகத்திற்கும் இல்லை.
   (A) அண்ணல் அம்பேத்கர்
   (B) அயோத்திதாசப் பண்டிதர்
   (C) பெரியார்
   (D) முத்துராமலிங்கர்

9. நேரு தன் அன்பு மகள் இந்திராகாந்திக்கு________முதல்________ ஆண்டுகள் வரை கடிதங்கள் எழுதிக்கொண்டே இருந்தார்?
   (A) 1920 ஆம் ஆண்டுமுதல் 1952 ஆம் ஆண்டுவரை
   (B) 1922 ஆம் ஆண்டுமுதல் 1964 ஆம் ஆண்டுவரை
   (C) 1923 ஆம் ஆண்டுமுதல் 1952 ஆம் ஆண்டுவரை
   (D) 1922 ஆம் ஆண்டுமுதல் 1954 ஆம் ஆண்டுவரை

10. பூமிப் பந்து என்னவிலை? - உன்
புகழைத் தந்து வாங்கும்விலை!
நாமிப் பொழுதே புறப்படுவோம் - வா
நல்லதை எண்ணிச் செயல்படுவோம்! – என்று பாடிய கவிஞர் யார்?
(A) வாணிதாசன்
(B) கவிஞர் தாராபாரதி
(C) முடியரசன்
(D) பாரதிதாசன்

11. பின்வரும் கூற்றுகளில் சரியானவற்றைக் கண்டறிக
1. “வீரம் இல்லாத வாழ்வும், விவேகமில்லாத வீரமும் வீணாகும்” என்று கூறியவர் பெரியார்.
2. மனிதனின் மனநிலையை “இருள், அருள், மருள், தெருள்” என குறிப்பிட்டவர் முத்துராமலிங்கர்.
3. நடுவண் அரசு 1995ம் ஆண்டு முத்துராமலிங்கரின் அஞ்சல்தலையை வெளியிட்டு சிறப்பித்தது
4. முத்துராமலிங்கரை “தேசியம் காத்த செம்மல்” என்று பாராட்டியவர் அறிஞர் அண்ணா.
(A) 1, 2, 4 மட்டும் சரி
(B) 2, 3, 4 மட்டும் சரி
(C) 2, 3 மட்டும் சரி
(D) 1, 2, 3 மட்டும் சரி

12. பிறப்பினால் வரும் மேல்சாதி – கீழ்சாதி என்னும் வேறுபாடுகளை அகற்றி, மக்கள் அனைவரும் “மனித சாதி” என்னும் ஓரினமாக எண்ண வேண்டும் என்று கூறியவர் யார்?
(A) பெரியார்
(B) அயோத்திதாசப் பண்டிதர்
(C) முத்துராமலிங்கர்
(D) அண்ணல் அம்பேத்கர்

13. எளிய சொற்களில் அறிவுரைகளைக் கூறியவர் ----------
(A) திருமூலர்
(B) கடுவெளிச் சித்தர்
(C) இராமச்சந்திர கவிராயர்
(D) பட்டுக் கோட்டை கவி

14. பெரியார், தம் வாழ்நாளில் _________ நாள்கள் மக்களுக்காக உரையாற்றிச் சமுதாயத் தொண்டு ஆற்றினார்.
   (A) 10,700
   (B) 8,600
   (C) 21,500
   (D) 8,100

15. பெரியார், தம் வாழ்நாளில் _________ மணிநேரம் மக்களுக்காக உரையாற்றிச் சமுதாயத் தொண்டு ஆற்றினார்.
   (A) 20,700
   (B) 8,600
   (C) 21,400
   (D) 10,700

16. பெரியார், தம் வாழ்நாளில்_________கூட்டங்கள் மக்களுக்காக உரையாற்றிச் சமுதாயத் தொண்டு ஆற்றினார்.
   (A) 8,600
   (B) 10,700
   (C) 21,400
   (D) 11,700

17. மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனின் கற்றோன் சிறப்புடையன் - மன்னற்குத்
தன்தேசம் அல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு. இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் ------
   (A) நல்வழி
   (B) பழமொழி நானூறு
   (C) கொன்றை வேந்தன்
   (D) மூதுரை

18. ஏட்டில் படித்ததோடு இருந்து விடாதே — நீ
ஏன்படித்தோம் என்பதையும் மறந்துவிடாதே ... என்று பாடியவர் ...........
   (A) உடுமலை நாராயணகவி
   (B) கவிஞர் காசி ஆனந்தன்
   (C) நெல்லை சு. முத்து
   (D) பட்டுக்கோட்டை கவிஞர்

19. காமராசர் முதல் அமைச்சராகப் பதவியேற்றதும் கல்விக்காகச் செய்த முதல் பணி யாது?
   (A) இலவசக் கட்டாயக் கல்விக்கான சட்டத்தை இயற்றி நடைமுறைப் படுத்தினார்.
   (B) கல்வித்துறை விதிகளை மாணவர்களின் நலனுக்காக மாற்றினார்.
   (C) மூடப்பட்டிருந்த 6000 பள்ளிகளை உடனடியாகத் திறக்க ஆணையிட்டார்.
   (D) பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடத்தினார்.

20. சரியான அகரவரிசைப்படி அமைந்ததைக் கண்டறிக.
   (A) நீலம், கோமேதகம், மாணிக்கம், வைரம், பவளம், வைடூரியம், முத்து, புஷ்பராகம், மரகதம்.
   (B) கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைடூரியம், வைரம்.
   (C) கோமேதகம், நீலம், பவளம், புஷ்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம்.
   (D) கோமேதம், நீலம், புஷ்பராகம், பவளம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம்.

21. திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர் .....
   (A) பட்டுக்கோட்டை கவிஞர்
   (B) உடுமலை நாராயணகவி
   (C) கவிஞர் தாராபாரதி
   (D) ஈரோடு தமிழன்பன்

22. தவறான இணையைக் கண்டறிக.
   (A) கூறை - புடவை
   (B) வாணம் - வெடி
   (C) பனி - குளிர்ச்சி
   (D) விழை - வெறுப்பு

23. நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் நடுப் பகுதியைத் தொடுவதால் ............ பிறக்கிறது.
   (A) 'ந' கரம்
   (B) 'ண' கரம்
   (C) 'ன' கரம்
   (D) 'ற' கரம்

24. ஒரே இடத்தில் ஒலிக்கப்படும் எழுத்துகள்
   (A) 'ல' கரமும் 'ள' கரமும்
   (B) 'ள' கரமும் 'ழ' கரமும்
   (C) 'ள' கரமும் 'ன' கரமும்
   (D) 'ள' கரமும் 'ண' கரமும்

25. ஈற்றடியைத் தேர்வு செய்க
களவினால் ஆகிய ஆக்கம் அளவிறந்து
...... ..... ........
   (A) ஆவது போலக் கெடும்
   (B) கள்ளத்தால் கள்வோம் எனல்
   (C) மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று
   (D) பெரும்பயன் இல்லாத சொல்

26. சொல்லுக சொல்லில் பயனுடைய சொல்லற்க
சொல்லில் பயன்இலாச் சொல்- இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி யாது?
   (A) சொல் பின்வருநிலையணி
   (B) பொருள் பின்வருநிலையணி
   (C) ஏகதேச உருவக அணி
   (D) சொற்பொருள் பின்வருநிலையணி

27. தந்நாடு விளைந்த வெண்ணெல் தந்து பிறநாட்டு உப்பின் கொள்ளைச் சுற்றி உமணர் போகலும் என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் ...........
   (A) குறுந்தொகை
   (B) நற்றிணை
   (C) பதிற்றுப்பத்து
   (D) பெரும்பாணாற்றுப்படை

28. இராஜஸ்தான், குஜராத் மாநிலங்களில் அறுவடைத்திருநாள் -------------- விழாவாகக் கொண்டாடப்படுகிறது.
   (A) பொங்கல்
   (B) லோரி
   (C) மகரசங்கராந்தி
   (D) உத்தராயன்

29. நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே – நம்
நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே ..... எனப் பாடியவர்
   (A) பட்டுக்கோட்டை கவிஞர்
   (B) உடுமலை நாராயணகவி
   (C) முடியரசன்
   (D) ப. ஜீவானந்தம்

30. மீனவர்களின் உடலைச் சுற்றும் போர்வையாகத் திகழ்வது ..........
   (A) கதிரவனின் ஒளிச்சுடர்
   (B) பனிமூட்டம்
   (C) முழுநிலவு
   (D) கடல்அலை

31. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தமிழ் சுவடிகள் சேகரித்துப் பாதுகாத்து வைக்கப்படும் தளம் ............
   (A) தரைத்தளம்
   (B) இரண்டாவது தளம்
   (C) ஐந்தாவது தளம்
   (D) ஏழாவது தளம்

32. மூதுரை என்னும் நூலில் அமைந்துள்ள பாடல்கள் மொத்தம் ......
   (A) 30
   (B) 32
   (C) 31
   (D) 35

33. கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறைபடாது – இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்
   (A) அகநானூறு
   (B) நற்றிணை
   (C) பட்டினப்பாலை
   (D) கார் நாற்பது

34. வாழ்க்கைக்கு வளம் தரும் மழைக் கடவுளை வழிபடும் நோக்கில் அக்காலத்தில் ............. இந்திர விழாவாகக் கொண்டாடப்பட்டது.
   (A) தீபாவளிப் பண்டிகை
   (B) பொங்கல் பண்டிகை
   (C) மகரசங்கராந்தி
   (D) போகிப் பண்டிகை

35. மற்போரில் சிறந்த பல்லவ மன்னன் ..............
   (A) மூன்றாம் நந்திவர்மன்
   (B) முதலாம் மகேந்திரவர்மன்
   (C) நரசிம்மவர்மன்
   (D) இரண்டாம் நந்திவர்மன்

36. பொருந்தாத இணையைக் கண்டறிக
   (A) சமர் - தரும்
   (B) சமர் - போர்
   (C) எக்களிப்பு - பெருமகிழ்ச்சி
   (D) மல்லெடுத்த - வலிமைபெற்ற

37. மயங்கொலி எழுத்துகள் மொத்தம் ............
   (A) 5
   (B) 6
   (C) 8
   (D) 10

38. புறநானூற்றில் அவ்வையாரின் எத்தனை பாடல்கள் இடம்பெற்றுள்ளது.
   (A) 7
   (B) 33
   (C) 15
   (D) 4

39. நாவின் நுனி மேல்வாய்ப் பல்லின் அடிப் பகுதியைத் தொடுவதால் ........... பிறக்கிறது.
   (A) 'ன' கரம்
   (B) 'ர'கரம்
   (C) 'ழ' கரம்
   (D) 'ந' கரம்

40. நாவின் நுனி மேல்வாய் அண்ணத்தின் முன் பகுதியைத் தொடுவதால் ......... பிறக்கிறது.
   (A) 'ண' கரம்
   (B) 'ன' கரம்
   (C) 'ல' கரம்
   (D) 'ழ' கரம்

41. நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் பற்களின் அடியைத் தொடுவதால் ............ தோன்றும்
   (A) ‘ழ’ கரம்
   (B) ‘ல’ கரம்
   (C) ‘ள’ கரம்
   (D) ‘ன’ கரம்

42. நாவின் நுனி மேல்நோக்கி வளைந்து வருடுவதால் ......... தோன்றும்
   (A) ‘ள’ கரம்
   (B) ‘ல’ கரம்
   (C) ‘ண’ கரம்
   (D) ‘ழ’ கரம்

43. நாவின் இருபக்கங்கள் தடித்து மேல் அண்ணத்தின் நடுப்பகுதியைத் தொடுவதால்........தோன்றும்.
   (A) ‘ள’ கரம்
   (B) ‘ல’ கரம்
   (C) ‘ன’ கரம்
   (D) ‘ண’ கரம்

44. மேல் அண்ணத்தின் முதல் பகுதியைத் தொட்டு வருடுவதால்............ தோன்றுகிறது.
   (A) ‘ற’ கரம்
   (B) ‘ன’ கரம்
   (C) ‘ர’ கரம்
   (D) ‘ழ’ கரம்

45. மேல் அண்ணத்தின் மையப்பகுதியை உரசுவதால் ............. தோன்றுகிறது.
   (A) ‘ள’ கரம்
   (B) ‘ற’ கரம்
   (C) ‘ர’ கரம்
   (D) ‘ல’ கரம்

46. ‘திராவிட நாட்டின் வானம்பாடி’ என்று பாராட்டப்பட்டவர் ...............
   (A) முடியரசன்
   (B) சுரதா
   (C) வாணிதாசன்
   (D) தாராபாரதி

47. வெள்ளிப் பனிமலையின் மீதுஉலாவுவோம் - அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம்
(A) பாரதியார்
(B) முடியரசன்
(C) கவிமணி
(D) பாரதிதாசன்

48. கொள்வதும் மிகை கொளாது
கொடுப்பதும் குறைபடாது ... என்ற பாடல் இடம் பெறும் நூல்
(A) குறுந்தொகை
(B) பதிற்றுப்பத்து
(C) பட்டினப்பாலை
(D) திருக்குறள்

49. வாணிகம் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவும் தமபோல் .. என்ற வரிகள் இடம் பெற்ற நூல் .....
(A) பட்டினப்பாலை
(B) குறுந்தொகை
(C) பதிற்றுப்பத்து
(D) திருக்குறள்

50. அருகில் உள்ளவற்றிற்கும் தொலைவில் உள்ளவற்றிற்கும் இடையில் இருப்பதைச் சுட்டிக் காட்ட அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட சொல்லுக்கு உதாரணம் ..........
(A) இது
(B) உது
(C) அது
(D) இவை

51. வினா கேட்கப் பயன்படும் வினா எழுத்துகள் மொத்தம் ..........
(A) 5
(B) 7
(C) 8
(D) 4

52. மீனவர்களுக்கு தோழன் ............

(A) மேகம்

(B) விண்மீன்

(C) கடலலை

(D) விண்மீன்கள்

53. கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன் பெற்றான் ..... என்று பாடியவர்

(A) முடியரசன்

(B) வாணிதாசன்

(C) தாராபாரதி

(D) பட்டுக்கோட்டை கவிஞர்

54. மீனவர்களின் பள்ளிக்கூடம் ........

(A) கடல்

(B) கடலலை

(C) மேகம்

(D) மணல்

55. மீனவர்களின் அடிப்படைப் பாடமாகத் திகழ்வது .........

(A) முழு நிலவு

(B) கட்டுமரம்

(C) மின்னல் கோடுகள்

(D) மீன்கள்

56. மீனவர்களுக்கு ஊஞ்சலாகத் திகழ்வது ................

(A) புயல்

(B) பனிமூட்டம்

(C) மின்னல் கோடுகள்

(D) கட்டுமரம்

57. மீனவர்களுக்கு வணங்கும் தலைவன் ...........

(A) கட்டுமரம்

(B) கடல்

(C) வானம்

(D) கடல்அலை

58. மீனவர்களுக்கு அனல் வீசும் கதிரவனின் ஒளிச்சுடர்தான் ............ ஆகத் திகழ்கிறது.
   (A) வாழும் வீடு
   (B) மேற்கூரை
   (C) தவம்
   (D) கண்ணாடி

59. ............ இல் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.
   (A) குற்றியலுகரத்தில்
   (B) குற்றியலிகரத்தில்
   (C) ஐகாரக்குறுக்கத்தில்
   (D) அளபெடையில்

60. எஸ். ஆர் அரங்கநாதன் விருது ............ க்காக வழங்கப்படுகிறது.
   (A) சிறந்த வாசகர்களுக்காக
   (B) சிறந்த நூலகர்களுக்காக
   (C) சிறந்த செய்தித்தாளுக்காக
   (D) சிறந்த இலக்கியத்திற்காக

61. இந்திய நூலக அறிவியலின் தந்தை ............
   (A) இரா. அரங்கநாதன்
   (B) பெப்பிசு
   (C) ஆனந்தரங்கர்
   (D) நெல்லை சு. முத்து

62. அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் வரலாறு,சுற்றுலா, அரசு கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் உள்ள தளம் ............
   (A) தரைத்தளம்
   (B) மூன்றாவது தளம்
   (C) ஐந்தாவது தளம்
   (D) ஏழாவது தளம்

63. மன்னனையும் குறை இல்லாமல் கற்றவரையும் ஒப்பிட்டு ஆராய்ந்து பார்த்தால் மன்னனைவிடக் கற்றவரே சிறந்தவர் என்னும் பொருளில் பாடலை இயற்றியவர் யார்?
   (A) ஔவையார்
   (B) மோசிகீரனார்
   (C) இளங்கீரனார்
   (D) நரிவெரூஉத்தலையார்

64. ‘ஆற்றுணா வேண்டுவது இல்’ என்ற பாடல்வரி இடம்பெற்ற நூல்
(A) முதுமொழிக்காஞ்சி
(B) திரிகடுகம்
(C) பழமொழி நானூறு
(D) ஆசாரக் கோவை

65. பஞ்ச பாண்டவர் இரதம் மற்றும் அர்ச்சுனன் தபசு ஆகிய இரண்டு பாறைகளிலும் ......... க்கும் மேற்பட்ட சிற்பங்கள் உள்ளன.
(A) 50
(B) 100
(C) 150
(D) 200

66. கங்கை நதிப்புறத்துக் கோதுமைப் பண்டம்
காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்ளுவோம் ..... என்று பாடியவர்
(A) பாரதியார்
(B) பாரதிதாசன்
(C) கவிமணி
(D) வாணிதாசன்

67. பறம்புமலையில் நடந்த விழாவில் குன்றக்குடி அடிகளாரால் ‘கவியரசு’ என்ற பட்டம் பெற்றவர் யார்?
(A) கண்ணதாசன்
(B) முடியரசன்
(C) வாணிதாசன்
(D) க.சச்சிதானந்தன்

68. மொழி முதலிலும் இறுதியிலும் வரும் வினா எழுத்து எது?
(A) எ
(B) யா
(C) ஏ
(D) ஆ

69. மொழியின் இறுதியில் வரும் வினா எழுத்தைக் கண்டறிக
(A) ஆ
(B) எ
(C) யா
(D) ஏ

70. அகவினா – வுக்குப் பொருந்தாததைக் கண்டறிக
   (A) எது?
   (B) ஏன்?
   (C) அவனா?
   (D) யார்?

71. பெற்ற தாயின் புகழும் நீ பிறந்த மண்ணின் புகழும் வற்றாமல் உன்னோடு வாழ்ந்திட வேண்டும் என்று பாடியவர் ....
   (A) கவிஞர் தாராபாரதி
   (B) பட்டுக்கோட்டை கவி
   (C) வாணிதாசன்
   (D) கவிமணி

72. பெருவாயின் முள்ளியார் பிறந்த ஊர் ...........
   (A) பொன் விளைந்த களத்தூர்
   (B) கயத்தூர்
   (C) மதுரை
   (D) பெரம்பூர்

73. திரையிசைப் பாடல்களில் உழைப்பாளிகளின் உயர்வைப் போற்றியவர் .....
   (A) பட்டுக்கோட்டை கவிஞர்
   (B) கவிஞர் அறிவுமதி
   (C) தாராபாரதி
   (D) உடுமலை நாராயண கவி

74. கல்விக் கண் திறந்தவர் என்று காமராசரை மனதாரப் பாராட்டியவர் ...............
   (A) அறிஞர் அண்ணா
   (B) சத்திய மூர்த்தி
   (C) காந்தியடிகள்
   (D) பெரியார்

75. திருக்குறளில் கற்பியலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை
   (A) 4
   (B) 18
   (C) 7
   (D) 1

76. காமராசருக்கு கன்னியாகுமரியில் மணிமண்டபம் அமைக்கப்பட்ட நாள் .........
   (A) 2.10.2000
   (B) 1.10.2000
   (C) 2.10.2002
   (D) 12.10.2000

77. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் ......
   (A) மஞ்சள்
   (B) கல்வி
   (C) தம்பி
   (D) வந்தான்

78. நேரு தனது கடிதத்தில் மிகவும் பிடித்தமானவர் என்று குறிப்பிட்டது யாரை?
   (A) காளிதாசர்
   (B) பெட்ரண்ட் ரஸ்ஸல்
   (C) பெர்னாட்ஷா
   (D) ஷேக்ஸ்பியர்

79. நன்றியறிதல் பொறையுடைமை இன்சொல்லோடு
இன்னாத எவ்வுயிர்க்கும் செய்யாமை கல்வியோடு
ஒப்புரவு அற்ற அறிதல் அறிவுடைமை
நல்லினத் தாரோடு நட்டல் ... என்ற பாடல் வரிகள் இடம் பெறும் நூல் .............
   (A) மூதுரை
   (B) முதுமொழிக்காஞ்சி
   (C) ஆத்திச்சூடி
   (D) ஆசாரக்கோவை

80. அறுவடைத் திருநாளை மகரசங்கராந்தியாகக் கொண்டாடும் மாநிலங்களில் பொருந்தாததைக் கண்டறிக.
   (A) மகாராட்டிரா (மராட்டியம்)
   (B) உத்திரப் பிரதேசம்
   (C) கர்நாடகா
   (D) தமிழ்நாடு

81. அறுவடைத் திருநாளை ‘லோரி’ என்று கொண்டாடும் மாநிலம் ...........
   (A) ஹரியானா
   (B) ஒடிசா
   (C) பஞ்சாப்
   (D) மகாராட்டிரா

82. சிற்பக் கலை நான்கு வகைகளும் காணப்படும் ஒரே இடம் ...............
(A) மாமல்லபுரம்
(B) காஞ்சிபுரம்
(C) கும்பகோணம்
(D) மதுரை

83. மீனவர்களுக்கு விளக்கு போன்றது எது?
(A) மின்னல் கோடுகள்
(B) அவர்கள் பிடிக்கும் மீன்கள்
(C) விண்மீன்கள்
(D) விண்ணின் இடி

84. ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை - அந்நாடு
வேற்றுநா டாகா தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில். – இப்பாடல் வரிகள் இடம்பெறும் நூல்
(A) நீதிநெறிவிளக்கம்
(B) ஆசாரக்கோவை
(C) பழமொழி நானூறு
(D) நாலடியார்

85. புதியதொரு விதி செய்வோம் என்ற நூலின் ஆசிரியர் ..........
(A) பாரதியார்
(B) முடியரசன்
(C) பட்டுக்கோட்டை கவிஞர்
(D) தாராபாரதி

86. துரைராசு என்னும் இயற்பெயர் கொண்ட கவிஞர் ..........
(A) தாராபாரதி
(B) முடியரசன்
(C) உடுமலை நாராயணகவி
(D) பட்டுக்கோட்டை கலியாணசுந்தரனார்

87. வெள்ளிப் பனிமலையின் மீதுஉலாவுவோம் - அடி
மேலைக் கடல்முழுதும் கப்பல் விடுவோம் என்று பாடிய கவிஞர் யார்?
(A) பாரதியார்
(B) முடியரசன்
(C) கவிமணி
(D) பாரதிதாசன்

88. வீரகாவியம் என்னும் நூலின் ஆசிரியர் ..........
   (A) க. சச்சிதானந்தன்
   (B) சாலை இளந்திரையன்
   (C) முடியரசன்
   (D) உடுமலை நாராயணகவி

89. ‘நானிலம் படைந்தவன்’ என்னும் தலைப்பில் கவிதையை எழுதியவர்
   (A) சாலை இளந்திரையன்
   (B) க. சச்சிதானந்தன்
   (C) முடியரசன்
   (D) பட்டுக்கோட்டை கவிஞர்

90. ‘நாட்டுப்புற இயல் ஆய்வு’ என்ற நூலின் ஆசிரியர்
   (A) நெல்லை சு. முத்து
   (B) சு. சக்திவேல்
   (C) கவிஞர் அறிவுமதி
   (D) சச்சிதானந்தன்

91. ‘பாலோடு வந்து கூழொடு பெயரும்’ .... என்ற பாடல் வரி இடம் பெற்ற நூல் ......
   (A) அகநானூறு
   (B) குறுந்தொகை
   (C) நற்றிணை
   (D) பரிபாடல்

92. பொன்னோடு வந்து கறியொடு பெயரும் ..... என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்
   (A) புறநானூறு
   (B) அகநானூறு
   (C) நற்றிணை
   (D) பரிபாடல்

93. “நடுவு நின்ற நன்னெஞ்சினோர்” ........... என்ற வரி இடம் பெற்ற நூல் .........
   (A) பட்டினப்பாலை
   (B) திருக்குறள்
   (C) குறுந்தொகை
   (D) நற்றிணை

94. வணிகர்கள் வண்டிகளில் பொருள்களை ஏற்றி வெளியூருக்கு செல்லும்போது குழுவாகவே செல்வார்கள். இக்குழுவை ........... என்பர்

(A) வண்டிக்குழு

(B) வணிகச் சாத்து

(C) வணிகக் குழு

(D) வியாபாரக் குழு

95. சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பொருள்களுள் பொருந்தாதவற்றைக் கண்டறிக.

(A) தேக்கு

(B) கண்ணாடி

(C) கற்பூரம்

(D) பட்டு

96. தமிழ்நாட்டிலிருந்து பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்ட பொருள்களுள் பொருந்தாததைக் கண்டறிக.

(A) இஞ்சி

(B) கற்பூரம்

(C) அரிசி

(D) மயில்தோகை

97. நாட்டின் நெறிதவறி நடந்துவிடாதே – நம் நல்லவர்கள் தூற்றும்படி வளர்ந்து விடாதே ..... எனப் பாடியவர்

(A) பட்டுக்கோட்டை கவிஞர்

(B) உடுமலை நாராயணகவி

(C) முடியரசன்

(D) ப. ஜீவானந்தம்

98. மூத்தோர் சொல் வார்த்தைகளை மீறக்கூடாது – பண்பு முறைகளிலும் மொழிதனிலும் மாறக்கூடாது .. என்று பாடியவர்

(A) நெல்லை சு. முத்து
(B) கவிஞர் அறிவுமதி
(C) பட்டுக்கோட்டை கவிஞர்
(D) முடியரசன்

99. மாற்றார் கைப்பொருளை நம்பி வாழக் கூடாது – தன் மானமில்லாக் கோழையுடன் சேரக் கூடாது .... என்று பாடியவர் ...........

(A) தாராபாரதி
(B) பட்டுக்கோட்டை கவிஞர்
(C) முடியரசன்
(D) காசி ஆனந்தன்

100. கல்லெடுத்து முள்ளெடுத்துக் காட்டுப் பெருவெளியை
மல்லெடுத்த திண்டோள் மறத்தால் வளப்படுத்தி
ஊராக்கி ஓங்கும் நகராக்கி நாடென்ற
பேராக்கி வாழ்ந்த பெருமை அவன் பெற்றான் ..... என்று பாடியவர்

(A) முடியரசன்
(B) வாணிதாசன்
(C) தாராபாரதி
(D) பட்டுக்கோட்டை கவிஞர்

******